# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2192/36 - 2020 සැප්තැම්බර් මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.09.10

*2192/36 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**காணி அமைச்சு**

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்

*செழிப்பின் பார்வை அரசாங்க கொள்கை அறிக்கையின்படி, முதலீட்டு வாய்ப்புக்களை விரிவுபடுத்தல், உள்ளூர் பால் உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் உள்ளூர் உணவு பயிர் உற்பத்திக்கு அரசாங்க நிலங்களை உகந்த முறையில் நிர்வகித்தல் ஆகியவை அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாகும். அந்த நோக்கத்திற்கான முதல் படியாக, இலங்கை பிரஜைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட காணி உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக சட்டரீதியான ஆவணங்கள் இல்லாமையினால் அரச காணியினை அபிவிருத்தி செய்துள்ள மக்களுக்கு துரிதமாகவும், பிரசித்தமான மற்றும் சட்டபூர்வமான ஆவணங்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக, அரசாங்க நிலங்களை முறைசாரா முறையில் ஆக்கிரமித்துள்ள நபர்களை முறையாக அடையாளங் காணவும், அவர்களில் தகுதிகளை சரிபார்த்து, சட்டபூர்வமான ஆவணங்களை வழங்கும் நோக்கத்துடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.*

**ஆவணங்கள் எதுவுமின்றி அரச காணிகளை அபிவிருத்தி செய்து அல்லது குடியிருக்கும் மக்களுக்கு சட்ட ரீதியான ஆவணம் வழங்குதலை துரிதப்படுத்துதல்**

*அரச காணியொன்றில் நிரந்தர வீடமைத்து, விவசாய நடவடிக்கையினை மேற்கொண்டு அல்லது ஏதேனும் அபிவிருத்தி நடவடிக்கையொன்றினை மேற்கொண்டு உரிமை பாராட்டும் மக்களுக்கு சட்டரீதியான ஆவணங்களை பெற்றுக்கொடுப்பதற்காக நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் (விசேட அபிவிருத்தி திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் தவிர்ந்த) தகுதியானோரைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.*

*தங்களது விண்ணப்பத்தினை பின்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக ஒழுங்குமுறையில் பூரணப்படுத்தி, காணி அமைந்துள்ள பிரதேச செயலகத்திற்கு அல்லது கிராம அலுவலர்/வெளிக்கள அலுவலர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.*

**விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் காலம்**

**2020.09.30 ஆந் திகதி அன்று முடிவடையும்.**

அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்தினால் பதிவு செய்யப்படுவதுடன் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு 2020.11.01 தொடக்கம் 2020.11.21 ஆந் திகதிக்கு இடையில் பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்படும் திகதியில் காணிக் கச்சேரி நடாத்தப்படும்.

**ஆர். எம். சீ. எம். ஹேரத்,**
காணி ஆணையாளர் நாயகம்,
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்.

2020, செத்தெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சட்டரீதியான ஆவணங்கள் இல்லாது அரச காணியை அபிவிருத்தி செய்துள்ள நபர்களுக்கு சட்டரீதியான ஆவணங்கள் வழங்குவதற்கான விண்ணப்பப்படிவம்**

(பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் 2020.09.30 ஆந் திகதிக்கு முன்னர் கிராம அலுவலர் /வெளிக்கள அலுவலரிடம் கையளிக்கவும்)

பிரதேச செயலாளர் பிரிவு :- ...................................... கிராம அலுவலர் பிரிவு :- ...........................................

01. **தனிப்பட்ட தகவல்கள்:**

1.1 விண்ணப்பதாரியின் பெயர் :- ..........................................................................................................

1.2 விலாசம்:- ..........................................................................................................

1.3 பிறந்த திகதி :- ..........................................................................

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :- | | | | | | | | | | | | |

1.5 திருமணமானவரா / திருமணமாகாதவரா :- ..........................................................................................

1.6 திருமணமானவராயின், பிள்ளைகளின் எண்ணிக்கை:- ..................

திருமணமான பிள்ளைகளின் எண்ணிக்கை:- ..................................

திருமணமாகாத பிள்ளைகளின் எண்ணிக்கை :- ..................................

1.7 விண்ணப்பதாரியின் தொழில் :- ..............................................................................................

1.8 குடும்ப உறுப்பினர்களின் தகவல்கள் :

| பெயர் | விண்ணப்பதாரியுடனான உறவுமுறை | தொழில் | வருடாந்த வருமானம் | வயது |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

1.9 குடும்ப மாத வருமானம் :- நிரந்தர .................................... கைப்பேசி இலக்கம் : ..................................
(விண்ணப்பதாரி, வாழ்க்கைத் துணை, திருமணமாகாத பிள்ளைகளின் வருமானம் உட்பட)

1.10 தொலைபேசி இலக்கம்:- நிரந்தர: ................................ கைப்பேசி: ............................................

1.11 மின்னஞ்சல் முகவரி (இருப்பின்) : ------------------------------------------------------------

02. **உடைமை கொண்டுள்ள காணி தொடர்பான தகவல்கள் :**

2.1 காணியின் அளவு:

ஹெக்டயார் : .............................. /ஏக்கர் : .......................... றூட் : ............................பேர்ச் : .............................

2.2 உடைமை கொண்டுள்ள காலம்:

2.3 காணி தேவைப்படும் நோக்கம் :-

குடியிருப்பு : ☐

விவசாயம் : ☐

வியாபாரம் : ☐

வேறு: ☐ ............................................................... (குறிப்பிடுக)

03. **வேறு காணிகளின் உரிமை தொடர்பாக:**

3.1 மேற்குறிப்பிட்ட காணிகளுக்கு மேலதிகமாக உங்களுக்கு அரசாங்கத்தினால் கிடைக்கப்பெற்ற அல்லது தனியார் காணி எவ்வளவு உள்ளது.

i. அரச காணி : ஹெக்டயார்..................................... /ஏக்கர் : ............ றூட் : .................. பேர்ச் : ...................

ii. தனியார் காணி: ஹெக்டயார்................................... /ஏக்கர் : ............றூட் : ....................பேர்ச் : ...................

மேற்குறிப்பிட்ட தகவல்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என்பதுடன் சிலவேளை இக்காணியினை பெற்றுக் கொள்வதற்காக தகைமையினை பெற்றபின் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையற்றதாக வெளிப்படுமிடத்து அத்தெரிவினை இரத்து செய்வதற்கு இணங்குவதுடன், அவ்வாறு இடம்பெறின் இக்காணித்துண்டினை மீண்டும் அரசுக்கு பாரப்படுத்துவதற்கு இணங்குவதுடன், அது தொடர்பாக எடுக்கப்படுகின்ற சட்டரீதியான செயற்பாடுகளுக்கு இத்தால் நான் உடன்படுகிறேன்.

.................................. ....................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

## பகுதி II

(விண்ணப்பதாரியிடம் கையளிப்பதற்காக)

விண்ணப்பப் படிவ இலக்கம் :- ...................................................

விண்ணப்பதாரியின் பெயர் :- ...........................................................................................

| கிராம அலுவலர் பிரிவின் பெயரும் இலக்கமும் | தொடரிலக்கம் |
|---|---|
| | |

விண்ணப்பப்படிவம்.......................................... ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

..................................................

(கிராம அலுவலர் /வெளிக்கள அலுவலரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை)

ஆர். எம். சீ. எம். ஹேரத்,
காணி ஆணையாளர் நாயகம்,
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்.

2020, செத்தெம்பர் 10.

09- 584

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.